## தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் சபை - 2013

தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் சபையின் 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிராகரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதியதிகாரச் சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கைத் திகதியளவிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கருதும் மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாடு தொடர்பான எனது அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் ஆண்டறிக்கையின் வரைவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் ஆண்டறிக்கையின் வரைவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் என்பவற்றைப் பேணுதல்

சபையின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்றிருந்த போதும், மீளாய்வாண்டிற்கான கணக்குகள், ஏடுகள், பதிவேடுகள் என்பன நிறைவு செய்யப்படாதிருந்தன.

### 2.3 சொத்துக்களிதும் பொறுப்புகளிதும் உள்ளவாறான நிலை

சபையானது இறுதியாகத் தயாரித்திருந்த 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம், செலவினம் தொடர்பான விபரம் வருமாறு.

| சொத்துக்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 106,363,045 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 37,903,942 |
| மொத்தச் சொத்துக்கள் | 144,266,987 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 3,798,759 |
| நடைமுறை அல்லாத பொறுப்புகள் | 24,329,669 |
| மொத்தப் பொறுப்புகள் | 28,128,428 |

| | |
|---|---|
| தேறிய சொத்துக்கள்/ உரிமைகள் | 116,138,559 |
| | --------------------- |
| | 144,266,987 |
| | ========== |
| மொத்த வருமானம் | 69,755,341 |
| மொத்தச் செலவினம் | 83,884,690 |
| | --------------------- |
| பற்றாக்குறை | 14,129,349 |
| | ========== |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இனங்காமை**

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | |
| iv ஆம் அத்தியாயத்தின் iii ஆம் மாதிரியினது ii ஆம் பந்தி | வினைத்திறமைகாண் தடை தொடர்பான விபரம் நியமனக் கடிதங்களில் குறிப்பிடப்படவில்லை. |
| (ஆ) 2006 பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் பந்தி | நிறுவனம் செலுத்திய பெறுமதி சேர்வரி தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டிற்கான வருடாந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்ட 8 விடயங்களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(i) 2009 ஆம் ஆண்டு முதல் திட்டமிடப்பட்ட இலங்கை தேசிய நூல்களை உள்ளடக்கிய பெயரேடு, 1941-1961 சிங்கள நூல்களை உள்ளடக்கிய பெரேடு, நிறுவனப் பெயர்களை உள்ளடக்கிய பெயரேடு என்பவற்றைத் தயாரித்துப் பிரசுரித்தல்.

(ii) இலங்கை தேசிய நூல்களது பெயரேட்டை 2011 திரட்டிய தொகுதிப் பிரசுரமாகச் சமர்ப்பித்தல்.

(iii) இலங்கை பட்டப்பின்படிப்பு கட்டுரையாக்கத் தொகுதியை 2007-2010 க்கான இரண்டாவது பிரசுரமாக அமைத்தல்.

(iv) இலங்கை ஆராய்ச்சி அறிக்கையின் 2005-2009 மூன்றாம் தொகுதியைப் பிரசுரித்தல்

(v) தேசிய புதினப்பத்திரிகைகளின் இலத்திரனியல் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளல்

(vi) இணையத்தளத்தின் வாயிலாக சுலபமாகக் கிடைக்கப்பெறாத பிரதிகளை தொடரெண் அடிப்படையில் பெறுதல்.

(vii) சட்டபூர்வ வைப்புச் சட்டத் திருத்தத்திற்கான தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்திற்கும் பரிந்துரைகள் வழங்குதல்

(viii) தேசிய நூலகம் புதிதாகப் பெற்றுள்ள தகவல்களை உள்ளடக்கிய பிரசுரங்களைத் தயாரித்து விநியோகித்தல்.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விரிவானதும் தன்னிறைவானதுமான தேசிய சேகரிப்புகளைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய இலக்கை நிறைவு செய்யும் விதத்தில் பொருத்தமான ஏடுகளையும் பிற வகைத் தகவல்களது மூலங்களையும் தன்வசப்படுத்தும் தேசிய நூலகத்திற்குச் சொந்தமான முக்கிய பணிக்கென மீளாய்வாண்டில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 3,000,000 ஆகும். இதில் 24 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 736,437 உடன் சர்வதேச புத்தகப் பரிமாற்றல் நடைமுறையின் கீழ் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு புத்தகங்களை நன்கொடையாக வழங்குவதற்கென ஒதுக்கப்பட்ட ரூபா 50,000 ஆன மொத்த நிதி ஏற்பாடும் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஆ) கீழே குறிப்பிடப்பட்ட நிர்வாகத் துறைகளில் காணப்பட்ட நலிவுகள் பின்வருமாறு.

**(i) கையிருப்புக் கட்டுப்பாடு**

* சுற்றறிக்கைப் பிரகாரம் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருட்கணிப்பு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை.

* 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய பின்வரும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாமை.

- சபை பிரசுரிக்கும் பிரசுரங்கள் மற்றும் நூலகப் பொருட்களது கிரயமும் விற்பனை விலையும் முறைப்படி கணிப்பிடப்படாமை.
- விற்பனை செய்யப்பட்டு, கணக்கில் சீராக்கலுக்கு உட்படுத்தப்படாத புத்தகங்கள் மற்றும் நூலக எழுதுகருவிவகைப் பொருட்களது கிரயம் கணக்கிலிருந்து நீக்கப்படாமை.
- பல்வேறு கையிருப்புகளுக்கும் கையிருப்புக் கணக்குகள் பேணப்படாது கொள்வனவு விலைகளை விற்பனை வருமானத்தில் பதிலீடு செய்து காண்பித்தல்.
- 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நேரடிப் பரிசோதனைக்குக் கிடைப்பதற்கு இல்லாதபோதும் கணக்கிலிடப்பட்டிருந்த ரூபா 3,481,306 பெறுமதியான கையிருப்பு சம்பந்தமாகத் திருத்தங்களை மேற்கொள்ளாமை.
- கையிருப்பு வழங்குதலைக் கணக்கிலிடாத சந்தர்ப்பங்கள் நிலவியமை.
- தேசிய புத்தகத் தொகுதியில் சேகரிக்கப்படும் கையிருப்பை கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை.

- மூன்று கையிருப்பு வகைகளது 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளுக்கும் களஞ்சியக் கையிருப்புப் பதிவேட்டிற்குமிடையே ரூபா 12,212,011 வேறுபாடு நிலவியது. இதனை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ii) நிலையான சொத்துக் கட்டுப்பாடு**

நிலையான சொத்துப் பதிவேடுகளைப் பேணாமை, நிலையான சொத்துக்களை வகைப்படுத்தும் பதிவேட்டைப் பேணாமை, சபையின் பிரிவுகளுக்கிடையே பொருட் பதிவேடுகளைப் பேணாமை, களஞ்சியப் பொருட் பதிவேடுகள் பூர்த்தி செய்யப்பட்டிராமை, 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்கணிப்பு மேற்கொள்ளப்படாமை, முன்னைய ஆண்டில் இனங்காணப்பட்ட 391 பயன்படுத்த முடியாத பொருட்கள் தொடர்பான பரிந்துரைகளை அமுல்படுத்தியதற்கான அறிக்கை இல்லாதிருத்தல் போன்ற காரணங்களால் நிலையான சொத்துக்களது உள்ளகக் கட்டுப்பாடு திருப்தியற்ற நிலைமையில் இருந்தன.

**(iii) ஆவணங்களைப் பேணுதல்**

சபையின் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய ஆவணங்களும் பதிவேடுகளும் பராமரிப்பதற்கு முறையான நிர்வாக நடைமுறைகள் அறிமுகஞ் செய்து வைக்கப்படாததால் அந்நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய செலவினம், வருமானம் போன்ற தகவல்கள், செயலாற்றல் அறிக்கைகள், துறைவாரியான முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் செலவினப் பேரேடு என்பவற்றுக்கிடையே குறிப்பிடத்தக்க இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

**(iv) நிதிசார் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுரிய ரூபா 1,050,232 நாளாந்தப் பெறுவனவுகளை வங்கியிலிடுவதற்கு 2 முதல் 23 நாட்கள் வரையிலான தாமதம் இருந்தமை, 2013 ஏப்ரல் 26 ஆந் திகதிய காசுப் பரிசோதனையின் போது ரூபா 14,203 காசுக் குறைவு இருந்தமை, தேறாத காசுக் கட்டளையாகிய ரூபா 9,064 தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை ஆகிய விடயங்களால் சபையின் நிதிசார் கட்டுப்பாடு திருப்தியற்ற நிலைமையில் இருந்தது.

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய நூலகத்தில் வருடாந்தம் அதிகரித்திருந்த புத்தகங்களது எண்ணிக்கை, பிரசுரங்களது எண்ணிக்கை மற்றும் நூலகச் சேவைக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் நூலக இடவசதி மற்றும் ஏனைய பௌதிக வளங்கள் அதிகரித்திராமை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளது நலிவுகள் காரணமாக, நூலக நடவடிக்கைகள் சிக்கலுக்கு உள்ளாகியதுடன், அநேக ஆண்டுகளுக்கு முன்னர் ரூபா 887,906 செலவில் தயாரிக்கப்பட்ட நூலகக் கட்டிடத்தை மீள நிர்மாணிக்கும் திட்டம் தயாரிக்கப்படாமையால் அச்செலவும் பயனற்ற செலவினமாகியிருந்தது.

(ஆ) தேசிய புத்தகக் குழாமிற்கென சேகரிக்கப்படும் நூலக வளங்கள் தொகுக்கப்படுவதற்கான உசாத்துணைப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படுகையில் அசாதாரண கால தாமதம் ஏற்பட்டிருந்தது. 177,938 முதல் 192,504 இலக்கச் சேகரிப்புகள் 3 மாதங்கள் முதல் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் வரை 2013 ஒக்டோபர் முதல் 2014 பெப்ரவரி மாதம் வரையான சேகரிப்புகளாகிய

கிடைப்பதற்கரிய ரூபா 199,903 பெறுமதியான 45 பிரசுரங்கள் ஓராண்டு கழிந்ததன் பின்னர் உசாத்துணைப் பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்தமை தெரியவந்தது.

### 3.4 ஆளணி நிர்வாகம்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவறான 197 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 55 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன. 05 முகாமைத்துவ மட்டப் பதவிகள் அநேக ஆண்டுகளாக பதில் கடமை பார்ப்பவர்களது நியமனத்திற்குள்ளாகியிருந்தது.

(ஆ) 2011 செப்தெம்பர் 16 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடங்கிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்குரிய 23 பதவிகளுக்குக் குறைந்தது ஓராண்டில் ஒரு தடவை வினைத் திறமை காண் தடைப்பரீட்சை நடாத்தப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டு முடிவுரை அதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(இ) பெயர்வழிக்கோவைகளில் உள்ளடக்கப்பட்ட கல்விச் சான்றிதழ்களை உறுதிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

நிதி, திட்டமிடல் அமைச்சின் 1998 பெப்ரவரி 13 ஆந் திகதிய உள்ளகக் கணக்காய்வுச் சுற்றறிக்கை 98/1 இற்கமைய உள்ளகக் கணக்காய்வு அறிக்கையை கணக்காய்வுக் குழுவிற்கும் மேற்கொள்ளப்பட்ட வேலை தொடர்பான அறிக்கையை நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதிகளுடன் அமைச்சின் செயலாளருக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டினது கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தை உள்ளடக்கிய 1708 மொத்த மனிதவள மணித்தியாலங்களில் 1148 மனித வள மணித்தியாலங்களை உள்ளடக்கிய 04 விடயங்களுக்குரிய கணக்காய்வுப் பணிகள் எதுவும் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள், அவ்வப்போது தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடும் நிதிக்கட்டுப்பாடும்
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஈ) திட்டமிடல், பாதீடு மற்றும் செயலாற்றல்
(உ) கொள்வனவு நடவடிக்கைகள்